அசல்

20-10-1934 சோமசுந்தர பாரதி
(S. S. Bharathi)

அசல் - 1 / நகல் - 1

ANNAMALAI UNIVERSITY
ANNAMALAINAGAR
20/10/1934

உ

ஸ்ரீமான் மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களுக்கு

திருவுடைப்பம்நூலோருடைய பெரியீர்!

உபயகுசலம்

ஒரு சிறு ஐயமேற்பட்டதால் தாங்கள் அதை விளக்கியறிந்து கொள்ளும் பொருட்டுத் தங்களுக்கு இஃதெழுதி விடையேற்கின்றேன்.

சிலப்பதிகார வேனிற்காதையாரம்பத்தில் "தொடியோள் பௌவம்" என்பதற்கு உரைகாரரும் அடியார்க்குநல்லார், "பெண்பெயராகவே, குமரிநதியைக் குறிப்பதாகும். தெற்[illegible]து, குமரிக்கடலென்றதென்னை?" எனவினவெழுப்பி, அதற்கு விடைகூறுமிடத்தான், "பண்டைக்காலத்தமிழகத்திற்கெல்லையாயிருந்த குமரிநதி கடல்கொளாவழிந்தது. அதனால் பிற்காலம் தெற்கெல்லை குமரிக்கடலேயாயிற்று" எனவிளக்கலானார். இவர் இங்குச் சுட்டியபடியே, தொல்காப்பியப்பாயிரம், புறநானூற்றுச் செய்யுட்களில், இவைகளிலும் கடல்கோளுக்கு முன்னைய தமிழ்வரம்பறுத்த தண்புனல் நாட்டுக்குப் புராதனத் தெற்கெல்லை குமரிநதியெனவே சுட்டப்படுகின்றது. முழுத்தமிழ்நாட்டுக்கு வடக்கும் தெற்கும் எல்லை கூறி, கிழக்கும் மேற்கும் கூறாமைக்குத் தொல்காப்பிய ஆசி

அசல்

20-10-1934 சோமசுந்தர பாரதி
(S. S. Bharathi)

அசல் -1 / நகல் -1



உரையாசிரியர் இளம்பூரண அடிகள் "குணக்கும் குடக்கும் கடல்வரை தமிழ் நாடே நாடாகப், பிற நாடின்மையால், எல்லை கூற வேண்டாமையால் கூறப்படவில்லை" என்றும், "வடக்கே வேங்கடம் வரையே தமிழும், அதன் வடக்கே வடுகு முதலிய பிற மொழிகள் வழங்கிய நாடுண்மையால், தமிழகத்துக்கு வேங்கடத்தை வடவெல்லை கூறியதுபோலத் தெற்கிலும் தமிழ் கூறும் நல்லுலகுக்குக் குமரியே தெற்ககப்பாட்டெல்லையென்னலால், அதன் தெற்கே தமிழல்லாத பிறமொழி பேசப்பட்ட பிறநாடுண்மை தெளியப்படும்" என விளக்கியுள்ளார். இக்குறிப்புகளாலும், எல்லைகூறும் போதும் அறுதியாக வரம்புகட்டி அறக்கடை எல்லைகள் கூறப்படுவதே முறையாதலானும், கடல்கோளுக்கு முன் தமிழ் நாட்டுக்குத் தெற்கெல்லையான குமரிநதியும், பாண்டியனின் பழைய [redacted] தமிழ்நாட்டின் ஒரு பகுதியான தென்பாலி நாட்டுக்கும் தெற்கறுதியில் தானே இருந்திருக்க வேண்டும்? இத்தென்பாலி நாட்டின் வடகோடியில், முன்னில்லாமல் வடிம்பலம்பநின்ற பாண்டியனால் புதிதாக ஆக்கப்பட்டது பஃறுளியாறு. இதற்கும் தெற்கே குமரிநதிக்கிடையே பெயர் குறித்த நாடு 49ம், இன்னும் குமரி, கொல்லி முதலிய பெயர்கள் சுட்டப்பட்டாத பல மலைநாடுகளும், ஆக 50க்கு மேற்பட்ட பல நாடுகளும், காடுகளும், மலைகளும், இருந்தழிந்ததாக அடியார்க்குநல்லார் விசதமாகக் கூறுகின்றனர். ஆகவே பஃறு[redacted]ளியாறு

20-10-1934 சோமசுந்தர பாரதி
(S. S. Bharathi)

அசல் - 1 நகல் - 1



எப்படியும் பழம் பாண்டி நாட்டிற்கு அறந்தெற்
கிலில்லை. பஃறுளிக்குத் தெற்கே பாண்டி நாட்டின்
பகுதி பெற்றிருந்ததென்பது வெளிப்படை.
இவையனைத்திற்கும் பஃறுளிக்கும் நெடுந்
தூரம் வடக்கே குமரி நதியிருந்திருப்பின், அதைத்
தெற்கெல்லையாகக் கூறியிருப்பார்களா?. பாண்
டி நாடே தமிழுக்குச் சிறப்புரிமையுள்ள
நாடென்பது, பண்டைப் புலவரெல்லாருக்கும்
ஒப்பமுடிந்ததாயிற்றே. அப்படியிருக்க,
அப்பாண்டியர் தமிழ்நாட்டின் தெற்கில் பெரும்
பகுதியை விலக்கி, மிகவும் வடக்கின்கண்ணுள்ள
ஒரு குமரியாற்றைத் தெற்கெல்லையாகக் கூ
றுவரா?. குமரியாறு அக்காலப் பாண்டி நாட்டின்
வடக்கண்ணதோர் யாறேயானால், தெற்கண் பஃ
றுளியையேனும், அதனினும் தெற்கிலுள்ள
தென்பாலி நாட்டின் தெற்கோரத்திலுள்ள விரி
தோரெல்லையையேனும், தெற்கெல்லையாகக் கூ
றுவதன்றோ முறையாகும்? குமரி நதியையே
தெற்கெல்லையாகக் குறித்திருப்பதனால், அதுவே
அக்காலத் தமிழகத்துக்கு அறக்கடை
கருதியில், கடல் கொளுக்கு முன்னைய சித்தெற்
தமிழ்நாட்டுக்குத் தெற்கெல்லையாகவின்ற
தென்பதல்லவோ தெளியக்கிடப்பது? மேலும்,
பழைய நூல்கள் எதனிலும் பஃறுளிக்குக்கீழ்
யாறு வடக்கிலுள்ளதென்று குறிப்பிடவில்லையா
தன்றோ? இப்படியிருக்கத், தாங்கள் சிலப்பதி

அசல்

20-10-1934 சோமசுந்தர பாரதி (S. S. Bharathi)

அசல் -1 / நகல் -1

(4)

காரப்புத்தக இறுதி அரும்பத அகராதியில், "பஃறுளியாறு குமரிக்குத் தெற்கண் ஓடிய ஓராறு" என்றிருக்கிறதே! இது, சிந்தித்துத் திருத்தவேண்டியதா? அல்லது, குமரிவடக் கணாறே என்பதற்கு நேர்க்கோடொன்று கண்டுளவாறு தயைசெய்து இந்தச் சந்தேகத்தை எனக்குச் சிறிது தெளிவாக்கியுதவுங்கள். தங்கள் அருமைப்பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கும்,

உண்மைச் சகோதரன்

S. S. Bharati.

Professor

அசல்

20-10-1934

சோமசுந்தர பாரதி.
(S. S. Bharathi)

அசல் - 1 | நகல் - 1

[illegible]

சோமசுந்தரபாரதியார்

கடிதம்

பதிவாயாறு. 31.10.34.

Pages
333-337.
த. க. Vol
- K

நகல்

Annalai university.
Annamalai Nagar.
20-10-1934.

பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய டாக்டர். உ.வே. சாமிநாதய்யரவர்களுக்கு,
மதிநுட்பம் நூலோடுடைய பெரியீர்!

உபயகுசலம்

ஒருசிறு ஐயமேற்பட்டதால் தாங்கள் அதை விளக்கியறிந்து கொள்ளும் பொருட்டுத் தங்களுக்கு இஃதெழுத வடையேற்கின்றேன்.

சிலப்பதிகார வேனிற்காதையாரம்பத்தில் "தொடியோள் பௌவம்" என்பதற்கு உரைகாணும் அடியார்க்கு நல்லார், பெண் பெயராகவே, குமரி நதியைக் குறிப்பதாகும். "தெற்கெல்லை குமரிநதி யென்றது, குமரிக் கடலென்றதென்னை?" என வினா வெழுப்பி, அதற்கு விடை கூறுமுகத்தான், "பண்டைக் காலத் தமிழகத்திற் கெல்லையாயிருந்த குமரிநதி கடல் கொள்ளலழிந்தது. அதன் பிற்காலம் தெற்கெல்லை குமரிக் கடலேயாயிற்று". என விளக்கலானார். இவர் இங்குச் சுட்டியபடியே, தொல்காப்பியப் பாயிரம், புறநானூற்றுச் செய்யுட் சில, இவைகளிலும் கடல் கோளுக்கு முன்னைய தமிழ் வரம்பறுத்த தண்புனல் நாட்டுக்குப் புராதனத் தெற்கெல்லை குமரிநதியெனவே சுட்டப்படுகின்றது. முழுத்தமிழ் நாட்டுக்கு வடக்கும் தெற்கு மட்டும் எல்லை கூறி, கிழக்கும் மேற்கும் கூறாமைக்குத் தொல்காப்பிய ஆதி உரையாசிரியர் இளம்பூரண அடிகள், "குணக்கும் ~~குடக்~~ குடக்கும் கடல்வரை தமிழ் நாடே நாடாகப் பிறநாடின்மையால், எல்லை கூறவேண்டாமையான் கூறப்படவில்லை" என்றும் "வடக்கே வேங்கடம் வரையே தமிழும், அதன் வடக்கே வடுகு முதலிய பிறமொழிகள் வழங்கிய நாடுண்மையால், தமிழகத்துக்கு வேங்கடத்தை வடவெல்லை கூறியதே போலத் தெற்கினும் தமிழ் கூறும் நல்லுலகுக்குக் குமரியே தெற்ககப் பாட்டெல்லையெனலால், அதன் தெற்கே தமிழல்லாத பிறமொழி பேசப்பட்ட பிறநாடுண்மை தெளியப்படும்" என விளக்கியுள்ளார். இக்குறிப்புக்களாலும்,

நகல்

page
333-337.
[illegible]

நகல்



எல்லை கூறும்போதும் அறுதியாக வரம்பு கட்டி
அறக்கடை எல்லைகள் கூறப்படுவதே முறையாத
லாலும், கடல் கோளுக்கு முன் தமிழ்நாட்டுக்குத்
தெற்கெல்லையான குமரிநதியும், பாண்டியனின்
பழைய தமிழ்நாட்டின் ஒரு பகுதியான தென்
பாலி நாட்டுக்கும் தெற்கறுதியில் தானே இருந்
திருக்க வேண்டும்? இத்தென்பாலி நாட்டின் வட
கோடியில், முன்னில்லாமல், வடிம்பலம்ப நின்ற
பாண்டியனால் புதிதாக ஆக்கப்பட்டது
பஃறுளியாறு. இதற்கும் (தெற்கே) குமரி
நதிக்குமிடையே பெயர் குறித்த நாடு 49ம்,
இன்னும் குமரி, கொல்லம், முதலிய பெயர்கள்
சுட்டப்படாத பல மலை நாடுகளும், ஆக 50க்
கு மேற்பட்ட பல நாடுகளும், காடுகளும், மலை
களும் இருந்தழிந்ததாக அடியார்க்குநல்
லார் வாசகமாகக் கூறுகின்றனர். ஆகவே
பஃறுளியாறு எப்படியும் பழம் பாண்டி நாட்
டிற்கு அறுதித் தெற்கில்லை. பஃறுளிக்குத் தெற்
கே பாண்டி நாட்டின் பகுதி பெரிதிருந்தது என்
பது வெளிப்படை. இவையனைத்திற்கும் பஃறுளிக்
கும் நெடுந்தூரம் வடக்கே குமரிநதியிருந்திருப்
பின், அதைத் தெற்கெல்லையாகக் கூறியிருப்பார்
களா? பாண்டி நாடே தமிழுக்குச் சிறப்புரிமை
யுள்ள நாடென்பது, பண்டைப் புலவர் எல்லாருக்
கும் ஒப்பமுடிந்ததாயாற்றே. அப்படியிருக்க,
அப்பாண்டியர் தமிழ்நாட்டின் தெற்கில் பெரும்
பகுதியை விலக்கி, மிகவும் வடக்கின் கண்ணுள்ள
தொரு குமரியாற்றைத் தெற்கெல்லையாகக் கூறுவரா?
குமரியாறு அக்காலப் பாண்டி நாட்டின் வடக்கண்ண
தோர் யாறேயாயின், தெற்கண் பஃறுளியையேனும்,
அதனினும் தெற்கிலுள்ள தென்பாலி நாட்டின் தெற்
கோரத்திலுள்ள பிறிதோரெல்லையையேனும், தெற்
கெல்லையாகக் கூறுவதன்றே முறையாகும்? குமரி
நதியையே தெற்கெல்லையாகக் குறித்திருப்பதனால், அதுவே
அக்காலத் தமிழகத்துக்கு அறுக்கடைசித் தெற்கறுதி
யால், கடல்கோளுக்கு முன்னைய பாண்டியர் தமிழ்நாட்
டுக்குத் தெற்கெல்லையாய் நின்றதென்பதல்லவோ
தெளியக் கிடப்பது? மேலும், பழைய நூல்கள் எது

நகல்

p. 333–337.

Copied.

து. த. vol K.

நகல்



னிலும் பஃறுளிக்குக் குமரியாறு வடக்கிலுள்ள
தென்ற குறிப்பே கிடையாதன்றே? இப்படி
யிருக்கத் தாங்கள் சிலப்பதிகாரப் புத்தக இறு
தி அரும்பத அகராதியில், "பஃறுளியாறு குமரிக்
குத் தெற்கண் ஓடிய ஓராறு" என்றிருக்கிற
தே? இது, சிந்தித்துத் திருத்த வேண்டியதா?
அல்லது, குமரி வடக்கண்ணே என்பதற்குத்
தக்க சான்றுகளுளவா? தயை செய்து இந்தச்
சந்தேகத்தை எனக்குச் சிறிது தெளிவாக்கி
யுதவுங்கள். தங்கள் அருமைப் பதில் ஆவலு
டன் எதிர்பார்க்கும்.

உண்மைச் சொந்தன்,
S.S. Bharati.
Professor.

நகல்

30

சோமசுந்தரபாரதியார்
கடிதம்.
20-10-1934.
3. பக்கங்கள்.

Pages 333-337.
தி. க. Vol. K'

Copied

44